**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp032026
https://ngmtamil.in/

# The folk beliefs described in the novel Thuyil

**Santhanalakshmi G[1]*, Dr J. Aruna[2],**
[1]Part-Time Research scholar, Department of Tamil, Bishop Heber College (Autonomous A++), Affiliated to Bharathidasan University, Trichy, Tamilnadu, India.
ORCid: https://orcid.org/0009-0009-3112-7796,
[2]Research Guide, Assistant professor, Department of Tamil, Bishop Heber College (Autonomous A++), Affiliated to Bharathidasan University, Trichy, Tamilnadu, India.
ORCid: https://orcid.org/0009-0000-4881-3164
*Correspondence: lakshmi2012dhivyasakthi@gmail.com.

**Article Info**
Received on 26-April-2026, Revised on 27-Feb-2026, Accepted on 27-Feb-2026, Published on 01-March-2026

## ABSTRACT

"It is not possible to determine exactly when beliefs originated in human life. However, these beliefs play such a significant role that they can be said to guide human life itself. We can observe that these beliefs continue to persist in people's everyday lives. Many ritual practices have emerged based on these beliefs. Together, they form an integral part of the emotional fabric of a society's culture. Some of these folk beliefs have been recorded by S. Ramakrishnan in his novel Thuyil. This study aims to explain and elaborate on those beliefs.".

***KEYWORDS:*** *Indian Sign Language, Deaf Linguistics, Natural Sign Language, Language Rights, Indo-Pakistani Sign Language, ISL Grammar, Deaf Education in India.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# துயில் நாவலில் குறிப்பிடப்படும் நாட்டுப்புற நம்பிக்கைகள்

[1]**சந்தானலெட்சுமி கோ,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
(Reg.No: BDU2120632779355), BDU/PhD/20/0456, Dated: 04.09.2020
பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 02
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
[2]**முனைவர் ஜா. அருணா**, நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 02
((பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதனின் வாழ்வில், என்று நம்பிக்கைகள் தோன்றின என்பதனைத் திட்டவட்டமாக அறிய இயலாது. ஆயினும் இந்நம்பிக்கைகளே மனித வாழ்வை இயக்குகின்றன என்று கூறும் அளவிற்கு, நம்பிக்கைகள் அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதனை நாம் காணமுடிகின்றன. மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. இந்நம்பிக்கையின் அடிப்படையில் பல சடங்கு முறைகள் தோன்றியுள்ளன. இவை அனைத்தும் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதியாக அமைகின்றன. இந்நாட்டுப்புற நம்பிக்கைகள் சிலவற்றினை எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் தமது துயில் நாவலில் பதிவு செய்துள்ளார். அதனை விளக்கி எடுத்துரைக்கும் வகையில் இவ்ஆய்வு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** ரோகிகள், கண்பார்வை, மந்திரம், திருநீறு, இறைநம்பிக்கை, ஆசி, புனிதயாத்திரை, தீர்த்தம், ஜெபித்தல்.

**முன்னுரை:**

நம்பிக்கைகள் என்பது மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தினால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனுடைய தன்னல உணர்வும், சமுதாய உணர்வுகளுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன எனலாம். நம்பிக்கைகள் மக்களிடையே காலம் காலமாகத் தொடர்ந்து வளர்ந்துகொண்டே வருகின்றன. நாட்டுப்புற நம்பிக்கைகள் என்பது நாட்டுப்புறவியலின் அடிப்படை கூறாக அமைகின்றன. மக்களுடைய கலை, ஒழுக்கம், நம்பிக்கை, அறிவு என்ற வாழ்க்கைமுறைகளுடைய பண்பாட்டின் கூறுகளில் மனிதனுடைய நம்பிக்கைகள், சடங்ககுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவை அடங்கிவிடுகின்றன. சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையிலேயே நம்பிக்கைகள் தோற்றம் பெறுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் அம்மக்களுடைய சமுதாயக் கூறுகளை இலக்கியங்கள் நமக்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

அவ்வகையில் எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுடைய துயில் நாவலில் குறிப்பிடப்படும் நாட்டுப்புற நம்பிக்கைகளை விளக்கும் விதமாக இவ்ஆய்வு அமைகின்றது.

**நம்பிக்கையின் தோற்றம்:**

நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் காணமாகத் தோன்றியது என்றாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணரமுடியாதபோதும், மக்களுடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க முடியாதபோதும் மனிதனுடைய மனது சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்துக்கொள்கின்றது. இதனடிப்படையிலேயே நம்பிக்கைகள் தோன்றுகின்றன. இயற்கையின் மீதுகொண்ட அச்சத்தின் காரணமாக அதன்செயல்பாடுகளை தன்வாழ்வோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டுள்ளன. இது மக்களிடையே வழிவழியாகப் பின்பற்றப்பட்டு, பிறப்பு முதல் இறப்பு வரையிலும் மனிதனால் நம்பிக்கைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

“நம்பிக்கை என்பது ஒன்றினுடைய உண்மையை ஏற்றுக்கொள்வதாகும். நம்பிக்கைகளின் அடிப்படையாக அமைவது அகமனம்(Subconcious) என்பர். இந்த அகமனமானது, மூளைக்குக் காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்ககளை உணர்த்துகின்றது. மூளையில் பதியக்கூடிய இவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும்போது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்த நம்பிக்கைகள், மனித வாழ்வில் மிக இன்றியமையாதவை என்பார் ஜேம்ஸ் வின்செஸ்டர்” (நாட்டுப்புறவியல், ப.149) என்றவாறு நம்பிக்கை குறித்து நாட்டுப்புறவியலில் சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

எனவே நம்பிக்கையினைத் தமது பற்றுக்கோடாகக் கொண்டு, பழங்கால நாடோடி மக்கள் தொடங்கி இன்றுவரை மக்களிடையே நிலவிவருவதனை நாம் அறியமுடிகின்றது.

**மந்திரக்கயிறு கட்டுதல்:**

குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை நோயின் காரணமாக வாடும்போது தத்தம் சமயத்தார் அவரவர்க்குரிய கடவுளை வேண்டிக்கொண்டு கயிறு கட்டிக்கொள்ளும் பழக்கம் மக்களிடையே நிலவுகின்றது. கடவுளின் அருள் இக்கயிற்றில் நிறைந்திருப்பதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மேலும் கண்பார்வைக்காகவும் கயிறு கட்டுதல் என்பது காணப்படுகின்றது. இதனை, “மக்கள் தாம்பெற்ற நோயினைத் தீர்ப்பதற்கு மதத்தையும், மந்திரவாதத்தினையும் தழுவி நிற்பதனை மத மாந்திரீக மருத்துவம் என்பர். பொதுவாக நோய்கள் உருவாக நான்கு காரணங்களைக் கூறுவர். 1.தெவத்தின் சினம் 2.தீய ஆவிகளின் செயல் 3.மந்திரவாதிகளின் செயல் 4. தீய பார்வைகள் இதற்கேற்ப மருத்துவ முறைகளும் அமைகின்றன.” (நாட்டுப்புறவியல், ப.144)

என்றவாறு மக்கள், மந்திரக்கயிறுகளைக் கட்டிக்கொள்வதில் உள்ள பல்வேறு நிலைப்பாடுகளை சண்முகசுந்தரம் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

இந்நம்பிக்கையினை எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் தமது துயில் நாவலில் பதிவு செய்துள்ளார். தனது உடல்நிலை சரியில்லாதக் குழந்தையினைக் காப்பாற்றுவதற்காக கடவுளிடம் வேண்டிக்கொண்டு செல்வி தனது மகளுக்கு கயிறு கட்டிய நிலையினை துயில் நாவல் எடுத்துரைக்கின்றது.

**திருநீறு பூசுதல்:**

இந்து மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகளில் ஒன்று திருநீறு பூசுதல் ஆகும். பல்வேறு குலத்தாரும் தத்தமக்குரிய தெய்வங்களை வணங்கி திருநீறு பூசிக்கொள்வர். அத்தெய்வத்தின் ஆசியானது, அவைகளை வணங்கிப் பூசிக்கொள்ளும் திருநீற்றில் இருக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் வழக்கில் உள்ளதை நாம் காண முடிகின்றது. திருநீறு பூசிக்கொண்டு செயல்படும்போது, தான் மேற்கொள்ளும் செயல் நன்மையில் முடியும் எனவும், தீவினைகளும் நோய்நொடிகளும் தம்மை அணுகாது எனவும் மிக்க நம்பிக்கை கொண்டுள்ளனர். இதனை துயில் நாவலில், சின்னராணி தனது துயரங்கள் அனைத்தும் தீர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு திருநீறு பூசிக்கொள்ளும் நிலை காட்டப்படுகின்றது.

**பெண்கள் வழி[பாடு:**

பெண்களினுடைய வழிபாடு சங்ககாலம் முதற்கொண்டு இன்றுவரை சிறப்பானதொரு வழிபாடாக அமைந்து வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாய், நல்ல கணவன் அமைதலுக்காக கன்னிப்பெண்கள் பிறை தொழுதலை அகநானூற்றுப் பாடல்,

“புள்ளித் தொய்யில் பொறிபடு சுணங்கின்
ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை யாம் இவன் ஒழிய” (அகம். 239: 8-10)

என்றவாறும், கோயில் வேள்வியுள் யானை உண்ட மிச்சிலை அருந்துதலினை பரிபாடல்,

“கன்னிமை கனிந்த காலத்தார் நின்
கொடி ஏற்று வாரணம் கொள் கவழ மிச்சில்
மறு அற்ற மைந்தர் தோள் எய்தார்” ( பரிபாடல் 19: 90-92)

என்றவாறும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு நோன்புநோற்கும் பெண்கள் ‘படிவ மகளிர்’ என்று நற்றிணை,

“படிவ மகளிர் கொடி கொய்து அழித்த” (நற்றிணை 272: 2)

மேற்கண்ட பாடலடிகளில் விளக்குகின்றது.

“பெண்கள் தைநீராடல் வீரயுகத்தில் இடம்பெறலாயிற்று. (பக்திப் பேரியக்கத்தில் மார்கழி நீராடலாக மாறி இறைக்காதலாக இது பரிணமித்தது) இவ்வாறு விரதமீட்டிப் பெற்ற கணவன் தெய்வமாகக் காட்டப்பட்டு, கணவரைத் தொழுது எழுதல் (கலி-39:17) வீர யுகத்தில் இலட்சியப்படுத்தப்படலாயிற்று.” (சங்கச் சமூகத்தில் பெண்டிர் நிலை, ப. 90-91) மேற்கண்ட சிவகாமியின் கூற்றிலிருந்து பெண்கள் தங்கள் பக்தி நிலையினைப் பல்வேறு வகையில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

துயில் நாவலில் பெண்கள் தங்களுடைய குடும்பத்தில் பிள்ளைகள் மற்றும் கணவரின் உடல்நிலை நலம் பெறுவதற்காக தெய்வத்திடம் வேண்டிக்கொண்டு அக்னிச்சட்டி தூக்கிக்கொண்டு வலம் வருதல், மொட்டை அடித்துக்கொள்ளுதல், மாவிளக்கு போடுதல் போன்ற செயல்முறைகளின் வாயிலாக, தன்வேண்டுதலை நிறைவேற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**புனித யாத்திரை:**

தெய்வத்திடம் வேண்டிக்கொண்டு புனித யாத்திரை மேற்கொண்டால் தன்னுடைய நோய் குணமாகும் என்பது ரோகிகள் (நோயாளிகள்) நம்பிக்கையாக இருந்த தன்மையை தெக்கோட்டின் துயில்தரு மாதா கோவிலுக்குத் திரளான நோயாளிகள் சென்ற செய்தியினை, துயில் நாவல் எடுத்துரைப்பதன்மூலம் அறியலாம். இதனை, எங்கிருந்து இவ்வளவு நோயாளிகள் வந்து சேர்கின்றார்கள், எந்த நம்பிக்கை இவர்களை வழிநடத்துகிறது என்பதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை, ஆனால் பாசஞ்சர் இரயில் முழுவதும் நிரம்பி வழிகின்றது. அவர்களின் வலிததும்பிய கண்களில் மிளிர்கிறது என்றவாறு துயில்தரு மாதா கோவிலுக்குச் சென்றால் நோய் குணமாகும் என்ற நம்பிக்கையே அவர்களை வழிநடத்திச் சென்றதனை இந்நாவல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**தீர்த்தமாடுதல்:**

நீர்நிலைகளைப் புனிதமாகக் கருதுவது நமது சமூக மரபு. அதனால்தான் நாட்டுப்புறத் தெய்வங்களில் சில, நீர்நிலைகளுக்கு அருகே அமைகின்ற நிலையினை நாம் காணமுடிகின்றது. அதுபோன்றே ஒவ்வொரு புனித தலத்திற்கும் புனித நீர்நிலைகள் அது குளமாகவோ, கிணறாகவோ அமைகின்றது. அனைத்து மதங்களிலும் நீர் புனிதத்தன்மை பெறுகின்றன. இதனை, “மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப்படும் மூன்று வடிவிலும் இறைவனே அருளுருத்தாங்கி நமக்கு நன்மையை விளைவிக்கின்றான். பல்வேறு தலங்களுக்கு யாத்திரை சென்று தங்கி அங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கி இறைத்திருவுருவை (மூர்த்தியை) வணங்கி மகிழ்தலை அனைவரும் விரும்பிச்செய்கிறோம். இம்மூவகைச் செயல்வழியாக இறைவன் உயிர்கட்கு அருள்புரிதலைச் சுருக்கமாக ‘சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே’ என்று அப்பர் தேவாரம் குறிப்பிடுகின்றது.” (தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும், ப.397)

துயில் நாவலில், தெக்கோடு துயில்தரு மாதாவின் திருவிழாவில் கலந்துகொள்ள வரும் ரோகிகளுக்கு ஊசிக்கிணற்றின் தண்ணீர் நோயாளிகளைக் குணமாக்கக் கூடியது என்ற நம்பிக்கையினால் அதில் நீராடிய செய்தியினை எடுத்துரைக்கின்றது.

**ஜெபித்தல்:**

ஒவ்வொரு சமயத்தவரும் தங்ககளின் இறைவனின்முன் நின்று சில மந்திரங்களை உச்சரித்து வழிபடுதல் என்பது பெரும்பான்மையாக அமைகின்றது. இப்படி உரைப்பது மந்திரமாகவோ அல்லது மனமொழியாகவோ இருக்கலாம். இறைவன் செவியால் தமது வேண்டுதல்களைக் கேட்டறிந்து தமக்கு நன்மை செய்வார் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

துயில் நாவலில், தெக்கோடு மாதா கோவிலுக்குச் செல்லும் குருடர்கள், செவிடர்கள், பைத்தியங்கள், பித்தவாதக்காரர்கள், ஊமைகள், வலிப்பு மற்றும் முடக்குவாதம் போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட எண்ணிக்கையற்ற நோயாளிகளும் ஒன்று சேர்ந்து ஜெபித்து, பிரார்த்தனையின் வழியே நோய்மை நீங்க வேண்டுவதும் தனது நோய் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைவதனை எடுத்துரைக்கின்றது.

**கழுதைக்குத் திருமணம் செய்வித்தல்:**

சில கிராமங்களில் வறட்சி ஏற்படும் கால கட்டங்களில், மழை பொழிவதற்காகப் பல்வேறு சடங்கு முறைகளை மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மேற்கொள்கின்றனர். இச்சடங்கு முறைகள் செய்வதால் தெய்வம் குளிர்ந்து தங்களது ஊருக்கு மழை வரும் என்று நம்பினர். அவ்வகையில் துயில் நாவலில் மழை பொழிவதற்காக கழுதைக்கு திருமணம் செய்வித்த நிலையினை விளக்குகின்றது. அதுவும், தாலிகட்டுதல் என்ற சடங்குமுறையோடு நடைபெற்றதனை விளக்குவதன்மூலம், இவையெல்லாம் நம்பிக்கையின் அடிப்படையிலேயே கிராமத்தில் மேற்கொண்டதனை நாம் அறிய முடிகின்றது. இதனை, “பிறப்பு முதல் இறப்புவரை மனிதனின் ஒவ்வொருநாள் வாழ்விலும் ஒவ்வொரு சிறுசெயலிலும்கூட எத்தனையோ நம்பிக்கைகள், சகுணங்கள், சாத்திரங்கள் மனிதனை ஆட்டிப்படைக்கின்றன” (தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப.64) என்றவாறு நம்பிக்கைகளாலும், சில சமயங்களில் மக்களின் காரண காரியத் தொடர்பில்லாத சில செயல்முறைகள் மூட நம்பிக்கையாகவும் மனிதனை ஆட்கொண்டுள்ள நிலையினை சோமலெ அவர்கள் விளக்குவதும் இங்கு நோக்கத்தக்கதாக அமைகின்றது.

**முடிவுரை:**

மக்களினுடைய வாழ்வியலின் ஒவ்வொரு கட்டத்திலும் நம்பிக்கையும் அதனால் மேற்கொள்ளும் சில செயல்முறைகளும் அவர்களோடு இரண்டறக்கலந்த நிலையினை நாம் அறியமுடிகின்றது.

பழங்குடி நிலையிலிருந்து மனிதன் நாகரிகம் அடைந்திருந்தாலும், அப்பழமையான மனநிலை இன்றும் அவனைவிட்டுப் போகாமல் தொற்றிக்கொண்டுள்ள நிலையினை இந்நம்பிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன், அதனைத் தன்வயப்படுத்த முயன்றபோது சில செயல்வினைகளை ஏற்படுத்தி, அதன்மீது கொண்ட நம்பிக்கையே நாளடைவில் நாட்டுப்புற நம்பிக்கைகளாக வளர்ந்துள்ளன எனலாம்.

இச்சடங்கு முறைகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றுள்ளன என்பதனையும் அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1.] சண்முகசுந்தரம் சு, நாட்டுப்புறவியல், காவ்யா பதிப்பகம், சென்னை, பத்தாம் பதிப்பு – 2022.
[2.] சிவகாமி ச, சங்கச்சமூகத்தில் பெண்டிர் நிலை, சங்க இலக்கிய ஆய்வுகள், சென்னை, பதிப்பு – 2000.
[3.] சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, பதிப்பு – 1981
[4.] பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம், தொகுதி-1, தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும், முதற்பதிப்பு – 2018.
[5.] ராமகிருஷ்ணன் எஸ், துயில், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2018.